Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.358/2004

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : மஞ்சுளா | Father/Husband Name | : நாராயணன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 09.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 04.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்**
**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மதுரையில் குடியிருந்து, மதுரை ஏர்போட் இமிக்ரேசனில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலூர் நீதிமன்றத்திலிருந்து எங்களது சென்னை தலைமைகத்திற்கு 22.02.2001ம் வருடம் பிரபு என்ற பயணி சிங்கப்பூரிலிருந்து பாஸ்போட் இல்லாமல் விமானம் மூலம் பயணம் செய்த ஆவணங்கள் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க அழைப்பாணை பெறப்பட்டது. எங்களது உயர் அதிகாரிகளின் வேண்டுகோளின்படி ஆவணங்களின்படி சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளேன். (நீதிமன்றம் சாட்சியின் அடையாள அட்டை ஒளி நகல் பெறப்பட்டது ).

கடந்த 22.02.2001ம் தேதி பிரபு என்ற பயணி சிங்கப்பூரிலிருந்து பாஸ்போட் இல்லாமல் எமர்ஜன்ஜி ஆவணம் மூலம் விமான பயணம் செய்துள்ளார். இதுகுறித்து புலன்விசாரணை அதிகாரி வேண்டுகோளின்படி அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள்தான் போலீசார் அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது. அந்த பிரபு சென்னை விமான நிலையத்திற்கு வந்தபோது அவரிடம் பாஸ்போட் இல்லாததனால் சிங்கப்பூர் அரசாங்கம் கொடுத்த சிறப்பு

பாஸ்போட் மற்றும் எமர்ஜன்சி சான்றிதழை பெற்று இமிகிரேசன் சான்று அளிக்கப்பட்டது. **(அந்த இமிகிரேசன் சான்று அசல் அசாஆ 7ஆக குறியீடு செய்யப்படுகிறது ). ( பிரபுவிற்கு சிங்கப்பூர் அரசாங்கம் வழங்கி சிறப்பு பாஸ்சின் நகல் அசாஆ8ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).**

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். 22.02.2001, லிருந்து 21.03.2001 வரை சென்னை ஏர்போட் இமிக்ரேசனில் பணியாற்றினேனா என்றால் இல்லை. பொதுவாக சிறப்பு பாஸ்சில் வருபவர்களின் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை, வாக்கு அடையாள அட்டைகளை ஆய்வு செய்து அதன்பின்னர்தான் இமிகிரேசன் சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான், எதாவது ஒரு அடையாள அட்டையை ஆய்வு செய்து சான்று வழங்கப்படும். பிரபுவிற்கு கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு பாஸ் சிங்கப்பூர் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதா அல்லது மலேசியா அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதா என்றால் பிரபுவின் சிறப்பு பாஸ்போட்டை பார்வையிட்டதில் அது சிங்கப்பூர் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது. பிரபுவின் பாஸ்போட் எதற்காக முடக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், பொதுவாக சிங்கப்பூர் அரசாங்கத்தால் இந்திய அரசாங்க பாஸ்போட்டை முடக்க முடியாது, தொலைந்து விட்டால் இந்திய தூதரகத்திலிருந்து எமர்ஜன்சி சான்றிதழ் பெற்று பயணிகள் இந்தியாவிற்கு வர முடியும். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை, பிரபுவின் ஆவணங்களை ஆய்வு செய்து நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, நான் அந்த கால கட்டத்தில் அங்கு பணிபுரியவில்லை, போலீசார் கேட்டுக்கொண்டதனால் எதிரிக்கு பாதகமாக, புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.